# தென்னைக்கு இடையில்.. தெம்பான நெல் சாகுபடி!



பாக்கு, கோகோ, மலர்கள்.. என தென்னைக்கு இடையில் விரியும் ஊடுபயிர் வரிசையில் நெல்லையும் இணைத்திருக்கிறார்கள். இயற்கை விவசாயிகள் பலரும். அந்த வகையில், தென்னைக்கு இடையில் ஊடுபயிராக, 'பால் ஒட்டு' ரக நெல்லை ஊடுபயிராகச் சாகுபடி செய்து வருகிறார், மதுரை மாவட்டம், பேரையூர் அருகே உள்ள மேலபட்டி கிராமத்தைச் சேர்ந்த பாதமுத்து.

மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் அமைந்துள்ள இக்கிராமத்தில் 'பனை இல்லாதத் தோட்டமே இல்லை' என்று சொல்லும் அளவுக்கு பார்வைக்கு எட்டிய தூரம் வரையில் சினேகமாக சிரிக்கின்றன.. பனை மரங்கள்.. பாதமுத்துவின் தோட்டத்திலும்.

உச்சி வெயில் வேளையில் நெல் அறுவடைப் பணியைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த பாதமுத்துவை சந்தித்த போது, எங்களுக்கு 10 ஏக்கர் நிலமிருக்கு. சின்ன வயசில் இருந்தே விவசாயம் எனக்கு ரொம்பப் பிடிச்ச விஷயம். படிப்பை முடிச்சிட்டு விவசாயத்தில் இறங்கினேன். 5 ஏக்கரில் தென்னை இருந்தது. மீதி இடத்தில் புஞ்சைப் பயிர்களையும் சாகுபடி செய்துகிட்டிருந்தேன். அந்த நேரத்தில் வாத்தியார் வேலை கிடைக்கவும், வேலையா.. விவசாயமா? என்று ஒரு கேள்வி எழுந்து, இரண்டையும் விடுவதற்க்கு மனசு இல்லை. பிறகு நல்ல யோசனை செய்து, தோட்டத்திற்க்கு ஒரு பண்ணையாள் வேலைக்கு வைத்துவிட்டு, நான் வாத்தியார் வேலையில் சேர்ந்தேன். வாராவாரம் ஒரு முறை தோட்டத்திற்க்கு வந்து பார்த்துக் கொள்வேன். இருபத்தைந்து வருடமாக தலைமை ஆசிரியராக இருந்து, 94-ம் வருடம் ஓய்வு கிடைத்ததும் முழு நேர விவசாயியாக

மாறிட்டேன் என்றார்.

**தற்சார்பு வேளாண்மை!**

‘ஆரம்பத்திலிருந்து இன்றைக்கு வரைக்கும் என் நிலத்தில் ரசாயனமே பயன்படுத்தினதில்லை. முழுக்க முழுக்க இயற்கை முறை விவசாயந்தான். என் பசங்க எல்லாரும் செட்டில் ஆகிட்டாங்க. இதற்க்கு மேல் வருமானத்திற்க்காக விவசாயம் செய்யத் தேவையில்லை என்று தோணிச்சு. அதனால் இப்ப தற்சார்பு வேளாண்மையில் இறங்கிட்டேன்.
இங்கு விளையும் தேங்காய், எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்துக்குவோம். உளுந்து, பாசிப்பயறு மாதிரியான பயிறுகளை வீட்டுத் தேவைக்கு வைத்துக்கொள்வோம். வருடம் இரண்டு முறை ஒரு ஏக்கரில் நெல் போடுவேன். அதிலும் குடும்பத் தேவைக்குப் போக மீதமிருப்பதை மட்டும்தான் விற்பேன்.
ஏற்கனவே ஐந்து ஏக்கரில் தென்னை இருக்க, நான்கு வருடத்திற்க்கு முன் கூடுதலா இரண்டு ஏக்கரில் தென்னையை வைத்துவிட்டேன். அதுக்கிடையில் ஊடுபயிராக வாழை, சோளம், உளுந்து, பாசிப்பயிர் என்று சாகுபடி செய்துக்கிட்டிருக்கேன்.

இப்போ மொத்தம் ஏழு ஏக்கரில் தென்னை இருக்கு. மீதி மூன்று ஏக்கர் நிலத்தில் அப்பப்ப எள்,உளுந்து, பாசிப்பயிர் மாதிரியான புஞ்சை தானியங்களைப் போட்டுக்குவேன். இந்தத் முறை ஒரு ஏக்கர் தென்னைக்கு இடையில் ‘பால் ஒட்டு’ ரக நெல்லை போட்டிருந்தேன். எந்த ரசாயனமும் போடாமல், பெரியளவில் செலவும் இல்லாமல் நல்ல மகசூல் கிடைத்திருக்கு. இது இட்லி செய்வதற்காகவே உள்ள தனி ரகம். வழக்கமாக தென்னைக்கிடையில் நெல் பயிர் நன்றாக வளராது. ஆனால், இந்த ரகம் நிழலில் அருமையாக வளர்கிறது. தனிப்பயிராக சாகுபடி செய்தாலும் நல்லா விளைகிறது.

**விதைநெல் 30 கிலோ!**

’25 அடிக்கு 25 அடி இடைவெளியில் நடப்பட்டுள்ள நான்கு வயதுக்குள் இருக்கும் தென்னைக்கு இடையில் ஊடுபயிராக நெல் சாகுபடி செய்யலாம். பால் ஒட்ட ரகத்தின் வயது 100 நாட்கள். புரட்டாசி, மாசிப் பட்டங்கள் ஏற்றவை. எல்லா மண் வகைகளிலும்

வளரும் தன்மை கொண்டது. நாற்றுப் பாவி நடவு செய்தால், ஏக்கருக்கு 30 கிலோ விதைநெல் தேவைப்படும்.

ஒரு ஏக்கரில் சாகுபடி செய்ய 10 சென்ட் நாற்றங்கால் அமைக்க வேண்டும். (ஒற்றை நாற்று முறையில் நடவு செய்தால் 3 கிலோ விதையே போதும். அதற்கேற்ற அளவுக்கு நாற்றங்கால் அமைக்கலாம்.)

நமது தோட்டத்தில் இருக்கும் மரங்களின் இலை தழைகளை வெட்டி, எடுத்து நாற்றங்காலில் இட்டு 'கேஜ் வீல்' மூலம் அழுத்திவிட்டு, விதைநெல்லைத் தூவ வேண்டும். நாற்று முளைக்கத் தொடங்கியதும் 200 கிலோ இயற்கைக் கலப்பு உரத்தைத் தூவி விட்டால், நாற்று நன்றாக வளரும்.

**1,000 கிலோ கலப்பு உரம்!**

நடவு வயலிலும், இலை-தழைகளை இட்டு, கேஜ் வீல் மூலம் அழுத்தி 25 நாட்கள் வயதுடைய நாற்றுகளைப் பறித்து நடவு செய்ய வேண்டும் ( ஒற்றை நாற்று முறையில் நடவு செய்பவர்கள் 15 நாள் வயதுடைய நாற்றுகளை நடவு செய்யலாம்). வயல் காயாத அளவுக்கு தண்ணீர் பாசனம் செய்ய வேண்டும்.

நடவு செய்த 25-ம் நாள் களை எடுத்து, அடுத்த நாள் 1,000 கிலோ கலப்பு உரத்தைத் தூவ வேண்டும். 40-ம் நாள் இரண்டாம் களை எடுத்து.. 1,000 கிலோ கலப்பு உரத்தைத் தூவ வேண்டும். பெரும்பாலும் பூச்சி மற்றும் நோய் தாக்காது. அப்படியே தாக்கினால்.. மூலிகைப் பூச்சிவிரட்டி தெளித்து கட்டுப்படுத்திக் கொள்ளலாம். 70-ம் நாளில் கதிர் பிடித்து, 90-ம் நாளுக்கு மேல் முற்றத் தொடங்கும். 100-ம் நாளுக்கு மேல் அறுவடை செய்யலாம்.

**அரிசியாக மாற்றினால், அதிக பணம்!**

"இலை, தழையோட நாங்களே தயாரிக்கும் இயற்கைக் கலப்பு உரத்தை மட்டும் வைத்து விளைவிப்பதால் நல்ல மகசூல் கிடைக்கிறது. அறுவடை செய்த பிறகு 30 மூட்டை (70 கிலோ மூட்டை) நெல் கிடைத்திருக்கு.

தென்னைக்கு இடையில் நட்டதால் வழக்கமான முறையில் நடவு செய்திட்டேன். ஒற்றை நாற்று முறையில் சாகுபடி செய்திருந்தால்.. இன்னும் கொஞ்சம் செலவைக் கட்டுப்படுத்தியிருக்கலாம்.

பொதுவாக நான் நெல்லை விற்பனை செய்ய மாட்டேன். அரிசியாக அரைத்து எங்க பசங்க வீடு, சொந்தக்காரங்க வீடு என்று பயன்படுத்திக்குவோம். பால் ஒட்டு ரகம் என்பது இட்லி அரிசியாக இருப்தால், தேவைக்குப் போக மீதியை விற்பனை செய்வேன். அரிசியாக மாற்றினால் ஒரு மூட்டைக்குச் சராசரியாக 40 கிலோ அரிசி கிடைக்கும். அந்தக் கணக்கில் பார்த்தால்.. மொத்தம் 1,200 கிலோ அரிசி கிடைக்கும். கிலோ 20 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் 24,000 ரூபாய் கிடைக்கும். செலவு போக, எப்படியும் 10 ஆயிரம் ரூபாய் வரை லாவம்தான் என்றார்.

| **ஒரு ஏக்கரில் பால் ஒட்டு ரக நெல் சாகுபடிக்கு பாதமுத்து சொல்லும் செலவு – வரவு கணக்கு** | | |
|---|---|---|
| **விவரம்** | **செலவு** | **வரவு** |
| உழவு | 1,500 | |
| விதை | 400 | |
| தழை வெட்ட | 800 | |
| ஆட்டு எரு | 1,000 | |
| வேப்பம் பிண்ணாக்கு | 2,000 | |
| கேஜ் வீல் மூலம் அழுத்த | 300 | |
| நடவு | 1,000 | |
| களை | 2,000 | |
| அறுவடை | 2,000 | |
| அரிசி விற்பனை மூலம் வரவு | | 21,000 |
| மொத்தம் | 11,000 | 21,000 |
| நிகர லாபம் | | 10,000 |

**கலப்பு உரம் தயாரிப்பு :**

தேவையானப் பொருட்கள் : ஆட்டுச் சாணம் – 1,000 கிலோ, வேப்பம் பிண்ணாக்கு – 50 கிலோ. அமுதக் கரைசல் – தேவையான அளவு.

செய்முறை : ஆட்டுச் சாணம், வேப்பம் பிண்ணாக்கு இரண்டையும் ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும். இந்தக் கலவையில் அமுதக் கரைசலை ஊற்றி, புட்டு பதத்தில்

பிசைந்தால்.. கலப்பு உரம் தயார். இது, ஒரு ஏக்கருக்கு போதுமான அளவு. (அமுதக்கரைசல்.. இதை 'நிலவள ஊக்கி' என்றும் சொல்கிறார்கள். நிலத்தில் தெளித்ததும் 24 மணி நேரத்தில் நுண்ணுயிர்கள் பெருகும். மாடு ஒரு முறை போட்ட சாணம் ஒரு முறை பெய்த சிறுநீர் இவற்றை ஒரு பிளாஸ்டிக் வாளியில் எடுத்துக்கொண்டு, அதில் ஒரு கைப்பிடி வெல்லம், ஒரு குடம் தண்ணீர் ஆகியவற்றையும் சேர்க்க வேண்டும். பிறகு, 24 மணி நேரம் நிழல்பாங்கான இடத்தில் வைத்தால்.. அமுதக் கரைசல் தயார்.)

**பசிப்பிணி போக்கும் பனை!**

வறட்சிக் காலங்களில் விவசாயம் கை கொடுக்காதபோது, 'பசிப்பிணி போக்கும்" என்பதால், இந்தப் பகுதியில் பனையை வேலியோரங்களில் வளர்ப்பதை பாரம்பரியமாகக் கடைபிடிக்கிறார்கள். ஒவ்வொரு தோட்டத்திலும் குறைந்தபட்சம் 100 பனைகளாவது இருக்கின்றன. இந்த மரங்களில் பதநீர் மற்றும் நொங்கு இறக்க ஆண்டுக்கு இவ்வளவு எனக்குத்துமதிப்பாக ஒரு விலை பேசி குத்தகைக்கு விட்டு விடுகிறார்கள். இங்கு பதநீரில் பனைவெல்லம் காய்ச்சும் பணியும் நடைபெறுகிறது.

**தொடர்புக்கு**

பாதமுத்து அலைபேசி : 04549-293562.

---

**ஆதாரம்** : www.vikatan.com பசுமை விகடன் வெளியிடான தேதி, 25.7.11